  

உ

ஸ்ரீ கட்டமுது விநாயகர் துணை    ஓம் நமசிவாய

### மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, எடமணல் கிராமம்

# ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி திருக்கோயில்
# அஷ்டபந்தன ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம்

# திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

சீர்காழிக்கு கிழக்கில் 8 கி.மீ தொலைவில் திருமுல்லைவாசல் வழித்தடத்தில் அமைந்துள்ள மேற்படி சிவாலயம் கடந்த சுமார் 12 வருட காலமாக மிக விமரிசையாக பூஜை, வழிபாட்டில் உள்ளது . எமது மூதாதையரும், தீர்க்க தரிசியுமான திரு. இ.எஸ். சீனிவாசய்யர் அவர்கள் (1889-1974) தனது ஆன்மீக உணர்வின் வெளிப்பாடாக முதற்கண் விநாயகர்கோவில் நிர்மாணப்பணியைத் தொடங்கி கட்டமுது விநாயகர் சன்னதியை உருவகம் செய்தார். அதன் கும்பாபிஷேகம் ஆகம விதிப்படி 1987ல் நிறைவேரியது. அதற்கு சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்பே (1965) தனது புஞ்சைத்தோப்பின் மணலில் புதையுண்ட ஒரு முழு சிவ லிங்கத்தை கண்டெடுத்து கடும் முயற்சி செய்து கோவில் வளாகத்தில் கொண்டு சேர்த்தார். இதன் பின் ஓர் முழுமையான சிவாலயம் எழுப்பவேண்டும் என்ற உந்துதல் அவர் மனதில் உதித்தது. இதை செயலாக்கும் விதமாக பல ஆண்டுகளுக்குப்பிறகு அவரது சந்ததியர்களால் பெரிய அளவில் விரிவாக்கப்பட்டு ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி, காசி விசாலாக்ஷி, கன்னிமூலகணபதி, வள்ளி தேவசேனை உடனான ஸ்ரீ முருகன், ஸ்ரீ சரஸ்வதி, கஜலெக்ஷ்மி, சண்டிகேசுவரர், நவக்கிரகாங்கள் முதலான சந்நிதிகள் நிர்மாணிக்கப்பட்டு மற்றும் அஷ்டபுஜ காளி, சுந்தரமூர்த்தி சுவாமிகள், கோஷ்டங்கள், பீடங்கள் நிறுவப்பட்டு 2012ம் ஆண்டு (31-05-2012) நூதன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தினமும் இரண்டு கால பூஜைகள், பிரதோஷம், சங்கடகரசதுர்த்தி தினங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ஆண்டு தோறும் சித்திரா பவுர்ணமி, கும்பாபிஷேக நிறைவு விழா (சம்வத்ஸரம்), விநாயக சதுர்த்தி, அன்னாபிஷேகம், ஆருத்ரா அபிஷேகம், வேத பாராயண வைபவங்கள், சிவராத்ரி முதலானவை வெகு விமரிசையாக நடத்தப்படுவதுடன் அன்னதானமும் நடைபெற்று வருகிறது.

அருகில் திருக்குருகாவூர் கிராமத்தில் அமைந்துள்ள வெள்ளடை ஈசனை தரிசிப்பதற்காக அடியார்களுடன் எட்டாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்திநாயனார் வரும் வழியில் இக்கோயிலருகில் சித்திரைமாத பவுர்ணமியன்று உச்சி வேளையில் பசி, தாகத்துடன் மயங்கியபோது சிவபெருமான் அந்தணர் வடிவில் வந்து பொதிசோறும் நீரும் கொடுத்து அருளியது இத்தலத்தின் பெருமையாகும். இதற்கான சான்று சேக்கிழாரின் பெரிய புராணத்தில் காணப்படுகிறது.

மேற்படி ஆலயம் திருப்பணி செய்யப்பட்டு வருகின்ற 2025ம் ஆண்டு பிப்ரவரி முதல் வாரத்தில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷோம் நடைபெற உள்ளது. **இதற்கான திட்ட மதிப்பீடு சுமார் ரூ. 65 லட்சமாகிறது.** மராமத்து பணிகள், பெயிண்டிங், மடப்பளி வளாக சீரமைப்பு, விரிவாக்கம், யாகசாலை, கும்பாபிஷோகம் ஆகியவை இதில் அடங்கும். இந்த உயரிய திருப்பணிக்கு இயன்ற பொருள் உதவிசெய்து சிவனருள் பெற்று உய்யுமாறு பக்தகோடிகளை பணிவுடன் வேண்டுகிறோம்.

**நன்கொடை செலுத்துவதற்கான வங்கி விபரங்கள் கீழ்வருமாறு**

Edamanal Sri Kasi Viswanathaswamy Religious and Welfare Trust
City Union Bank Ltd., Sirkazhi.    SB A/c. No. 500101010277399
IFS Code : CIUB0000202    UPI ID : eze0141765@CUB

EDAMANAL SRIKASIVISWANATHASWAMY R

Scan & Pay


தொடர்பு விபரம் :

Brig.ESKMurthy,VSM(Retd.) Mob.9341988512 Mail: nalinesk@yahoo.com
E.S,Jayaraman Mob.9980129460 Mail:edsj1945@gmail.com
E.S.Rajagopalan. Mob.9483530552 Mail: es.rajagopalan@gmail.com
N.Raman . Mob.9840058187 Mail: d2mcdm@gmail.com
E.S.Venkataramani(USA) Mob.+1(224)5679915 Mail: edvenkat@yahoo.com
E.S.Natarajan(AUS) Mob.+61403773775 Mail: esnataraj57@gmail.com



ஸ்ரீதர் ஆப்செட், சீர்காழி. செல்: 9952751748